Q.C-080

# DEPARTMENTAL EXAMINATIONS (COMPUTER BASED TEST)

| Name of the Test: | Departmental Test in the Tamil Nadu Services Manual Volume-I for the Staff of the Tamil Nadu Public Service Commission (Without Books) | 009 |
|---|---|---|

Maximum Time: 2.30 Hour　　　　Maximum Marks: 100

## *IMPORTANT INSTRUCTIONS*

## OBJECTIVE TYPE

கொள்குறி வகை வினாத்தாள்

**Read the following instructions carefully before beginning to answer the questions.**

வினாக்களுக்கு விடையளிக்கத் தொடங்கும் முன்பு கீழ்க்கண்ட அறிவுரைகளைக் கவனமாகப் படிக்கவும்.

1. This computer based Test contains 100 number of questions in objective Type.
   இந்தக் கணினி வழித் தேர்வானது, 100 கொள்குறி வகையிலான வினாக்களைக் கொண்டது.

2. Answer all questions. Each question carries one mark
   அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும் ஒவ்வொரு வினாவும் ஒரு மதிப்பெண் உடையது.

3 In case of doubt, English version is the Final.
   வினாக்களில் சந்தேகம் இருப்பின் ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களே இறுதியானது.

4. Words of masculine gender in these questions shall, where the context so require, be taken to include feminine gender.
   இந்த வினாக்களில் இடம் பெற்றுள்ள ஆண் பாலினத்தவரின் வார்த்தைகளில் தேவைப்படின், சூழலுக்கேற்ப பெண் பாலினத்தவரின் வார்த்தைகளும் அடங்கும்.

5. Before answering the questions in CBT, candidates should read the following instructions displayed in the monitor:
   விண்ணப்பதாரர்கள் கணினி வழித் தேர்விற்கு விடையளிக்கத் தொடங்கும் முன் கணினியின் திரையில் தோன்றும் அறிவுரைகளை கவனமாகப் படிக்கவும்.

**a)** One question will be displayed on the screen at a time.
ஒரே நேரத்தில் ஒரு வினா மட்டுமே கணினித் திரையில் தோன்றும்.

**b)** Time available for you to complete the examination will be displayed through a countdown timer in the top right-hand corner of the screen. It will display

1. All the actions taken by the Government shall be in accordance with the provisions contained in the
அரசின் அனைத்து செயல்பாடுகளும் ———— படி இருக்க வேண்டும்

(A) Civil Law
குடிமையியல் சட்டம்

(B) Act
சட்டம்

(C) Constitution of India
இந்திய அரசியலமைப்புச் சட்டம்

(D) Service Rules
பணி விதிகள்

2. The recruitment shall be made by the Government by invoking ________ of Constitution of India.
அரசு, பணிநியமன முறைகளை இந்திய அரசியலமைப்புச் சட்ட ————ன் படி மேற்கொள்கிறது

(A) Art. 311
விதி (Article) 311

(B) Art. 309
விதி 309

(C) Art. 310
விதி 310

(D) Art. 312
விதி 312

3. Article 14 of Constitution of India speaks about
இந்திய அரசியலமைப்பு சட்ட விதி 14-ன் சாராம்சம்

(A) Equality before Law
சட்டத்தின் முன் அனைவரும் சமம்

(B) Reservation in Public
அரசுப் பணி நியமனங்களில் இடஒதுக்கீடு

(C) Parliament
பாராளுமன்றம்

(D) Prohibition of discrimination
பாகுபாட்டிற்கான தடை

4. All revenues received by the State shall form
அரசின் அனைத்து வருவாய் இனங்களும் சேர்ந்து உருவாக்குவது ———— ஆகும்

(A) Annual Budget
ஆண்டு வரவு செலவுத்திட்டம்

(B) Consolidated Funds of the State
மாநிலத்தின் ஒருங்கிணைந்த நிதி

(C) Taxes
வரிகள்

(D) Loans
கடன்கள்

5. The Governor of Tamil Nadu made the Tamil Nadu Public Service Commission Regulations, 1954 by invoking
தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறை 1954, இந்திய அரசியலமைப்புச் சட்டவிதி ———— ன் படி தமிழக ஆளுநரால் ஏற்படுத்தப்பட்டது

(A) Art. 310 and 311
விதி 310 மற்றும் 311

(B) Art. 309 and 310
விதி 309 மற்றும் 310

(C) Art. 313 and 315
விதி 313 மற்றும் 315

(D) Art. 318 and Proviso to Art. 320(3)
விதி 318 மற்றும் விதி 320(3) ன் கீழுள்ள காப்புரை

6. The Constitution of India commenced on
இந்திய அரசியலமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்த ஆண்டு

(A) 05.09.1950
(B) 15.08.1947
(C) 26.01.1950
(D) 30.01.1950

7. All executive action of the Government of a State shall be expressed in the name of the
அரசின் அனைத்து நிர்வாக செயல்பாடுகளும் ———— ன் பெயரால் வெளியிடப்படுகிறது

(A) Chief Minister
முதலமைச்சர்

(B) Governor
ஆளுநர்

(C) Speaker
சபாநாயகர்

(D) Chief Justice of High Court
உயர்நீதி மன்றத் தலைமை நீதிபதி

8. Tamil Nadu Public Service Commission Rules of procedure came into force with effect from
தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய செயல்முறை விதிகள் ———— முதல் நடைமுறைக்கு வந்தது

(A) 13.05.1996
(B) 04.06.1998
(C) 11.05.1996
(D) 14.05.1996

9. Where direct recruitment is made to class-I posts in the Tamil Nadu State Legislative Assembly Secretariat Service, the commission shall invite the ____________ of the Tamil Nadu Legislative Assembly or his representative to take part only in the deliberations of the commission?
தமிழக சட்டமன்ற செயலகப் பணிகளில் (class-I) தொகுதி- I பதவிகளுக்கான நேரடி நியமனத்தின் போது, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சட்டமன்றப் பேரவையின் ———— அல்லது அவரின் பிரதிநிதி ஒருவரை தேர்வாணைய ஆலோசனையில் கலந்து கொள்ள அழைக்கிறது

(A) Deputy Speaker
துணை சபாநாயகர்

(B) Speaker
சபாநாயகர்

(C) Whip
அரசுக் கொறடா

(D) Deputy Whip
அரசு துணைக் கொறடா

10. If the Chairman is unable to be present at a meeting of the Commission, he shall nominate any of the ____________ of the Commission to act for him.
தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய கூட்டத்தில், அதன் தலைவர் கலந்து கொள்ள இயலாத போது, தேர்வாணையத்தின் ———— தனக்காக செயல்பட நியமனம் செய்யலாம்

(A) Secretary
செயலாளர்

(B) Controller of Examination
தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர்

(C) Members
உறுப்பினர்களுள் ஒருவரை

(D) Section officials
பிரிவு அதிகாரிகளுள் ஒருவரை

11. The quorum for holding a meeting of the Commission shall be ____________ of the members including Chairman.
தேர்வாணைய கூட்டங்களில் பங்கேற்க தேவைப்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கை, தலைவரையும் உள்ளடக்கி ———— ஆக இருக்க வேண்டும்

(A) One thirds
மூன்றில் ஒரு பங்கு

(B) Two thirds
மூன்றில் இரண்டு பங்கு

(C) Three fourths
நான்கில் மூன்று பங்கு

(D) Four fifths
ஐந்தில் நான்கு பங்கு

12. The Tamil Nadu Public Service Commission annual report shall present to the State Government by ____________ of every year.
தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஆண்டறிக்கை அரசுக்கு ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்படவேண்டிய நாள்

(A) 15th June
ஜூன் 15

(B) 15th March
மார்ச் 15

(C) 15th May
மே 15

(D) 15th July
ஜூலை 15

13. The Tamil Nadu Public Service Commission shall made the recruitment to any civil post or to any State Service under rules ____________ of the Commission.
தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், அரசுப் பணிக்கான நியமனங்களை தேர்வாணைய செயல்முறை விதிகள் ———— ன்படி மேற்கொள்கிறது

(A) 7 and 10
7 மற்றும் 10

(B) 3 and 4
3 மற்றும் 4

(C) 4 and 5
4 மற்றும் 5

(D) 5 and 13
5 மற்றும் 13

14. The Tamil Nadu Public Service Commission consists of ___________ members.
தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் ___________ உறுப்பினர்களைக் கொண்டிருக்கிறது

(A) Fifteen
பதினைந்து

(B) Fourteen
பதினான்கு

(C) Sixteen
பதினாறு

(D) Twelve
பன்னிரண்டு

15. The Chairman and other members of the State Public Service Commission shall be appointed by the ___________ of the State.
மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையத் தலைவர் மற்றும் இதர உறுப்பினர்களை நியமிக்கும் அதிகாரம் உள்ளவர்

(A) Chief Minister
முதலமைச்சர்

(B) Chief Justice of High Court
உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி

(C) Governor
ஆளுநர்

(D) President
குடியரசுத் தலைவர்

16. Under which Regulations of Tamil Nadu Public Service Commission, the cases are referred to the Commission for its consultation by the State Government?
கீழ்காணும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறைகளுள், எதன் அடிப்படையில் மாநில அரசு தேர்வாணையத்தைக் கலந்தாலோசிக்கும்?

(A) 18(1)

(B) 19

(C) 20

(D) 18(2)

17. Where the Sate Government propose to Remove / Dismiss a Government Servant from Civil Service in disciplinary matters, it is necessary to consult the?
ஒழுங்கு நடவடிக்கை நேர்வுகளில், மாநில அரசு ஒரு அரசு ஊழியரை பணியறவு/பணிநீக்கம் செய்ய உத்தேசித்தால், ———— ஐ கலந்தாலோசிப்பது அவசியமாகும்

(A) State Public Service Commission
மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையம்

(B) Union Public Service Commission
மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையம்

(C) Uniformed Services Recruitment Board
சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம்

(D) Staff Selection Commission
பணியாளர் தேர்வு ஆணையம்

18. When the post of Under Secretary to Government is filled up by promotion, it is ____________ to consult the Commission?
அரசு சார்புச் செயலாளர் பதவியை, பதவியுயர்வின் மூலம் நிரப்பும் போது தேர்வாணையத்தை கலந்தாலோசிப்பது ———— ஆகும்.

(A) Unnecessary
அவசியமற்றது

(B) Necessary
அவசியம்

(C) Unwarranted
தேவையற்றது

(D) Dispensable
விரும்பத்தகாதது

19. A member of the State Public Service Commission shall hold office for a term of ____________ from the date in which he enters upon his office (or) until he attains the age of ____________ years whichever is earlier?
மாநில அரசுப் பணியாளர் தேர்வாணைய உறுப்பினர் பதவியேற்று ———— வரையிலோ அல்லது அவருக்கு ———— வயது நிறைவடையும் வரையிலோ, இவற்றுள் எது முன்னர் நிகழ்கிறதோ, அதுவரையிலும் பதவியில் இருக்கலாம்

(A) 6 years, 62
6 ஆண்டுகள், 62

(B) 5 years, 62
5 ஆண்டுகள், 62

(C) 6 years, 60
6 ஆண்டுகள், 60

(D) 6 years, 61
6 ஆண்டுகள், 61

20. It shall not be necessary for the commission to be consulted in the matter of Recruitment, Appointment, Promotion and Transfer of a Government servant under State and Sub-ordinate services as per __________ Regulations Annexure I-A of Tamil Nadu Public Service Commission.
தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறைகளில் பிற்சேர்க்கை-I-A-ல் குறிப்பிடப்பட்டுள்ள மாநில மற்றும் சார்நிலைப் பணிகளின் கீழுள்ள பதவிகளுக்கான பணி நியமனம், பதவியுயர்வு மற்றும் பணி மாறுதல் போன்ற நேர்வுகளில், ஒழுங்குமுறை __________ ன் படி தேர்வாணையத்தை கலந்தாலோசிக்க வேண்டிய அவசியமில்லை

(A) 17
(B) 18(2)
(C) (16)(b)
(D) 19

21. The authority competent may at any time revoke the order of suspension by invoking the rule __________ of Tamil Nadu Civil Services (Discipline and Appeal) Rules.
ஒரு அரசுப் பணியாளரை, தற்காலிக பணி நீக்கம் செய்வதற்குரிய அதிகாரி, அத்தற்காலிக பணி நீக்கத்தை தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்குமுறை மற்றும் மேல்முறையீடு) விதிகளுள், விதி __________ ன் கீழ் எந்த நேரத்திலும் இரத்து செய்யலாம்

(A) 17(e)(1)
(B) 17(e)(3)
(C) 17(e)(6)
(D) 17(e)(4)

22. Under which rule of Tamil Nadu Civil Services (Discipline and Appeal) Rules, a Government servant who was under suspension may again be placed under suspension for any other disciplinary proceedings or criminal complaint or trail against him for the reasons to be recorded in writing?
ஏற்கனவே தற்காலிக பணி நீக்கத்திலுள்ள அரசுப் பணியாளர் ஒருவரை, அவருக்கெதிரான மற்றொரு ஒழுங்கு நடவடிக்கை அல்லது குற்றவியல் புகார் அல்லது விசாரணைக்காக, உரிய காரணங்களை பதிவு செய்து தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்குமுறை மற்றும் மேல்முறையீடு) விதிகளில் எவ்விதியின் கீழ் மீண்டும் தற்காலிகப் பணிநீக்கம் செய்ய இயலும்?

(A) 17(e)(4)
(B) 17(e)(5)
(C) 17(e)(2)
(D) 17(e)(6)

23. If a Government servant who is detained in custody whether on a criminal charge or otherwise, for a period of longer than forty eight hours shall be considered under rule 17(e)(2) of Tamil Nadu Civil Services (Discipline and Appeal) Rules as
குற்றவியல் புகாருக்காக 48 மணிநேரத்திற்கு மேலாக காவலில் வைக்கப்பட்ட அரசுப் பணியாளர் ஒருவரை, தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்குமுறை மற்றும் மேல்முறையீடு) விதிகளில் விதி 17(e)(2)-ன்படி ———— உள்ளவராக கொள்ள வேண்டும்

(A) Continued suspension
தொடர் தற்காலிக பணி நீக்கத்தில்

(B) Deemed suspension
கருதப்பட்ட தற்காலிகப் பணி நீக்கத்தில்

(C) Review of suspension
தற்காலிக பணிநீக்க மறுஆய்வு

(D) Suspension
தற்காலிகப் பணி நீக்கத்தில்

24. Quote relevant rules of Tamil Nadu Civil Services (Discipline and Appeal) Rules, in which the authority competent for placing the officers belongs to Sub-ordinate services under suspension
சார்நிலைப் பணிகளிலுள்ள அலுவலர்களை, தற்காலிகப் பணி நீக்கம் செய்யத் தகுதியுள்ள அதிகாரி யாரென்பதைக் குறிப்பிடும் தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்குமுறை மற்றும் மேல்முறையீடு) விதி என்ன?

(A) 17(e)
(B) 14(a)(1)
(C) 13
(D) 12

25. The Rule ____________ of the Tamil Nadu Civil Services (Discipline and Appeal) Rules specifies the authorities which may order suspension referred to in rule 17(e) of the said Rules on the members of the State Services.
மாநிலப் பணிகளிலுள்ள உறுப்பினர்களை தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்குமுறை மற்றும் மேல்முறையீடு) விதிகளில், விதி 17(e) ன்கீழ் தற்காலிகப் பணி நீக்கம் செய்யத் தகுதி வாய்ந்த அதிகாரிகளைப் பற்றிக் குறிப்பிடும் விதி யாது?

(A) 13
(B) 14
(C) 19
(D) 15

26. During the period of suspension, a Government servant will be paid the allowance which is called
தற்காலிகப் பணி நீக்கத்திலுள்ள அரசுப் பணியாளருக்கு அக்காலத்தில் வழங்கப்படும் படி

(A) Dearness Allowance
பஞ்சப்படி

(B) Daily Allowance
தினப்படி

(C) Subsistence Allowance
பிழைப்பூதியம்

(D) Special Allowance
சிறப்புப்படி

27. The time limits prescribed for review of suspension will not be applicable to cases of Government servant against whom __________ proceedings have been initiated.
———— நடவடிக்கை தொடரப்பட்ட அரசுப் பணியாளருக்கு, தற்காலிக பணி நீக்கத்தை மறு ஆய்வு செய்ய வரையறுக்கப்பட்டுள்ள கால அளவு பொருந்தாது

(A) Criminal
குற்றவியல்

(B) Disciplinary
ஒழுங்கு

(C) Disciplinary cases Tribunal
ஒழுங்கு நடவடிக்கை தீர்ப்பாயம்

(D) None of the above
இவற்றில் ஏதுமில்லை

28. The time limit prescribed for furnishing further representation on the findings of Inquiry Officer in disciplinary cases
ஒழுங்கு நடவடிக்கை நேர்வுகளில், விசாரணை அலுவலரின் கண்டுபிடிப்பின் மீது மேல்விளக்கம் அளிக்க நிர்ணயம் செய்யப்பட்ட காலம் ———— ஆகும்

(A) 7 days
7 நாட்கள்

(B) 14 days
14 நாட்கள்

(C) 15 days
15 நாட்கள்

(D) 21 days
21 நாட்கள்

29. Which punishment requires the Tamil Nadu Public Service Commission consultation, before passing final orders in disciplinary cases by the State Government?
ஒழுங்கு நடவடிக்கை நேர்வுகளில், மாநில அரசு ஆணை வெளியிடும்முன், கீழ் குறிப்பிட்டுள்ள எந்த தண்டனைக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தை கலந்தாலோசிப்பது அவசியமாகும்?

(A) Withholding of promotion
பதவியுயர்வினை நிறுத்தி வைத்தல்

(B) Suspension
தற்காலிகப் பணி நீக்கம்

(C) Compulsory Retirement
கட்டாய ஓய்வு

(D) Stoppage of Increment
ஊதிய உயர்வு நிறுத்தம்

30. If the disciplinary authority decided to deviate the findings of the Inquiry Officer shall furnish the ____________ along with Inquiry Report to the delinquent officer for further representation.
ஒழுங்கு நடவடிக்கை அலுவலர், விசாரணை அலுவலரின் கண்டுபிடிப்புக்கு மாறுபட்டு முடிவு எடுக்கும் பட்சத்தில், குற்றம் சாட்டப்பட்ட அலுவலருக்கு மேல்விளக்கமளிக்க, விசாரணை அறிக்கையோடு ———— ஐயும் சேர்த்து வழங்க வேண்டும்

(A) Copy of personal hearing
தனி விசாரணையின் நகல்

(B) Disciplinary proceedings
ஒழுங்கு நடவடிக்கை செயல்முறைகள்

(C) Evidence
ஆதாரம்

(D) Penalty proposed
உத்தேச தண்டனை

31. The penalty of __________ shall be imposed only on a member of the Tamil Nadu Basic Service.
தமிழ்நாடு அடிப்படை பணியாளர்களுக்கு மட்டும் வழங்கப்படும் தண்டனை __________ ஆகும்

(A) Withholding of increment
ஊதிய உயர்வு நிறுத்தம்

(B) Reduction to lower post
கீழ்நிலைப் பதவிக்கு குறைத்தல்

(C) Recovery from pay
ஊதியப் பிடித்தம்

(D) Fine
அபராதம்

32. The standard of proof in disciplinary inquiries has been held to be __________ and not proof beyond doubt as in the Criminal Case.
ஒழுங்கு நடவடிக்கை விசாரணையில், ஆதாரத்தின் தரம் (standard of proof) __________ செய்யப்பட வேண்டும், மாறாக, குற்றவியல் நேர்வுகளில் ஆதாரம் சந்தேகத்திற்கிடமின்றி நிருபிக்கப்பட வேண்டும்

(A) Partly proved
பகுதி நிருபணம்

(B) Sufficient
போதுமானதாக இருத்தல்

(C) Proved
நிருபணம்

(D) Not proved
நிருபணமாகவில்லை

33. The final order in the disciplinary case should be signed by the
ஒழுங்கு நடவடிக்கை நேர்வுகளில், இறுதியாணையில் கையொப்பமிடுபவர் __________ ஆவார்

(A) Inquiry Officer
விசாரணை அலுவலர்

(B) Sub-ordinate Officer
சார்நிலை அலுவலர்

(C) Immediate Higher Officer
அடுத்த உயர் அதிகாரி

(D) Disciplinary Authority
ஒழுங்கு நடவடிக்கை அலுவலர்

34. The power of imposing the penalty of dismissal from service shall not lie with any authority other than the lending authority as per __________ of Tamil Nadu Civil Services (Discipline and Appeal) Rules.
தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்குமுறை மற்றும் மேல்முறையீடு) விதிகளில், விதி __________ ன்படி, கடனளித்த துறை அதிகாரியைத் (lending authority) தவிர 'பணியறவு' எனும் தண்டனை வழங்கக்கூடிய அதிகாரம் வேறு எந்த அதிகாரிக்கும் கிடையாது

(A) Rule 8
(B) Rule 16
(C) Rule 15
(D) Rule 17

35. The power of review vested only with
மறு ஆய்வு செய்யும் அதிகாரம் __________ க்கு மட்டுமே உள்ளது

(A) Disciplinary authority
ஒழுங்கு நடவடிக்கை அலுவலர்

(B) Government
அரசு

(C) Heads of Department
துறைத் தலைவர்

(D) Vigilance Commission
விழிப்புப்பணி ஆணையம்

36. A member of State and Subordinate service including a person who has ceased to be a member of such service are entitled to submit a review petition within a period of two months as prescribed under rule __________ of Tamil Nadu Civil Services (Discipline and Appeal) Rules, in cases where a Government passed original punishment order.
ஒழுங்கு நடவடிக்கை நேர்வுகளில், அரசால் இறுதி ஆணை வெளியிடப்பட்டு, 2 மாத காலத்திற்குள் மாநில மற்றும் சார்நிலைப் பணியைச் சார்ந்த மற்றும் சாராத உறுப்பினர், தனது மறு ஆய்வு மனுவினை தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்குமுறை மற்றும் மேல்முறையீடு) விதிகளில், விதி __________ ன்படி சமர்ப்பிக்க வேண்டும்

(A) 19
(B) 20
(C) 23
(D) 17

37. In the event of difference of opinion between the borrowing authority and the lending authority, the services of the Government servant shall be replaced at the disposal of
ஒழுங்கு நடவடிக்கை நேர்வுகளில், கடனளித்த துறையின் அதிகாரிக்கும் (lending authority) கடன்பெற்ற துறையின் (borrowing authority) அதிகாரிக்குமிடையே மாறுபட்ட கருத்து இருக்குமாயின், குறிப்பிட்ட அரசுப் பணியாளரின் பணி சார்ந்த தேவைகளை தீர்த்து வைப்பவர் ———— ஆவார்

(A) The lending authority
கடனளித்த துறையின் அதிகாரி

(B) Borrowing authority
கடன்பெற்ற துறையின் அதிகாரி

(C) The Government
அரசு

(D) Disciplinary authority
ஒழுங்கு நடவடிக்கை அலுவலர்

38. Time limit prescribed for preferring appeal against the punishment imposed under Tamil Nadu Civil Services (Discipline and Appeal) Rules is
ஒழுங்கு நடவடிக்கை நேர்வுகளில் வழங்கப்பட்ட தண்டனைக்கெதிராக மேல்முறையீடு செய்ய, தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்குமுறை மற்றும் மேல்முறையீடு) விதிகளில் வரையறுக்கப்பட்ட கால அளவு ———— ஆகும்

(A) Two days
இரண்டு நாட்கள்

(B) Two years
இரண்டாண்டுகள்

(C) Two months
இரண்டு மாதங்கள்

(D) Thirty days
முப்பது நாட்கள்

39. Where is the order of rotation prescribed for selection for appointment under the Tamil Nadu Government Servants (Conditions of Service) Act, 2016?
தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016-ல் பணி நியமனத்திற்கான இனச்சுழற்சி வரிசை எங்கு குறிப்பிடப்பட்டுள்ளது?

(A) Schedule – II
இணைப்புப் பட்டியல்- II

(B) Schedule – V
இணைப்புப் பட்டியல்- V

(C) Schedule – III
இணைப்புப் பட்டியல்- III

(D) Schedule – I
இணைப்புப் பட்டியல்- I

40. Rule of reservation is not applicable for appointment, if there is __________ vacancy.
காலியிட மதிப்பீடு ———— எனில், பணி நியமனங்களுக்கு இட ஒதுக்கீடு முறை பொருந்தாது

(A) Two
இரண்டு

(B) Ten
பத்து

(C) One
ஒன்று

(D) Fifty
ஐம்பது

41. On completion of how many years of service, Selection Grade in a post shall be awarded?
ஒரு பதவியில் எத்தனை ஆண்டுகள் நிறைவு செய்தால், தேர்வுநிலை வழங்கப்படுகிறது?

(A) 10 years
10 ஆண்டுகள்

(B) 20 years
20 ஆண்டுகள்

(C) 5 years
5 ஆண்டுகள்

(D) 15 years
15 ஆண்டுகள்

42. How many types of Relinquishment of Rights by a Member of Service is referred in Tamil Nadu Government Servants (Conditions of Service) Act, 2016?
தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016-ன்படி, ஒரு பணியைச் சார்ந்த உறுப்பினரால் எத்தனை விதமான உரிமைத் துறப்பு மேற்கொள்ள இயலும்?

(A) One
ஒன்று

(B) Two
இரண்டு

(C) Three
மூன்று

(D) Four
நான்கு

43. The list of posts for which Tamil Nadu Public Service Commission need not be consulted for appointment is mentioned in __________ of Tamil Nadu Public Service Commission Regulations, 1954.
பணி நியமனங்களுக்காக தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தை கலந்தாலோசிக்கத் தேவையில்லாத பதவிகளுக்கான பட்டியல், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்கு முறைகள் 1954-ல் எங்கு குறிப்பிடப்பட்டுள்ளது?

(A) Annexure – I – A
பிற்சேர்க்கை I – A

(B) Annexure – 1 – B
பிற்சேர்க்கை 1 – B

(C) Annexure – II
பிற்சேர்க்கை – II

(D) Annexure – III
பிற்சேர்க்கை – III

44. In the case of direct recruitment to the Group – C posts ____________ percent of vacancies in each category shall be reserved for "Ex-servicemen".
தொகுதி- C பதவிகளுக்கான நேரடி நியமனத்திற்காக ஒவ்வொரு வகையிலும் (each category) ———— சதவீதம் முன்னாள் இராணுவத்தினருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது

(A) Two
இரண்டு

(B) Five
ஐந்து

(C) Three
மூன்று

(D) Four
நான்கு

45. All postings and transfers shall be made by the
அனைத்து நியமனங்கள் மற்றும் மாறுதல்களை (postings and transfers) மேற்கொள்பவர் ———— ஆவார்

(A) Government
அரசு

(B) Heads of Department
துறைத் தலைவர்

(C) Sub-ordinate Authority
சார்நிலை அலுவலர்

(D) Appointing Authority
நியமன அலுவலர்

46. Temporary relinquishment may be made for a period of not less than
தற்காலிக உரிமைத் துறப்பு குறைந்தபட்சம் ———— க்கு குறையாமல் மேற்கொள்ளலாம்

(A) Three months
மூன்று மாதங்கள்

(B) Two years
இரண்டாண்டுகள்

(C) Three years
மூன்று ஆண்டுகள்

(D) Two months
இரண்டு மாதங்கள்

47. As per Tamil Nadu Public Service Commission Regulations, 1954, the Commission shall be consulted, in case of appointment from one class to another class in the
தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்கு முறைகள் 1954-ன் படி, பின்வருவனவற்றுள் எந்த பணிகளுக்கு ஒரு வகுப்பிலிருந்து (Class) மற்றொரு வகுப்புக்கு மேற்கொள்ளப்படும் நியமனங்களுக்கு தேர்வாணையத்தைக் கலந்தாலோசிக்க வேண்டும்?

(A) Tamil Nadu Ministerial Service
தமிழ்நாடு அமைச்சுப் பணி

(B) Tamil Nadu Basic Service
தமிழ்நாடு அடிப்படைப் பணி

(C) Tamil Nadu General Service
தமிழ்நாடு பொதுப்பணி

(D) Tamil Nadu General Sub-ordinate Service
தமிழ்நாடு பொது சார்நிலைப் பணி

48. A candidate whose name appears in authoritative list of candidate is called as
தகுதியுடைய விண்ணப்பதாரர்களின் பெயர்பட்டியலில் அடங்கியுள்ள விண்ணப்பதாரர் ———— என அழைக்கப்படுகிறார்

(A) Probationer
தகுதிகாண் பருவத்தினர்

(B) Approved candidates
ஏற்பளிக்கப்பட்ட விண்ணப்பதாரர்

(C) Approved probationers
தகுதிகாண் பருவம் நிறைவு செய்தவர்

(D) Full members
முழுநேர உறுப்பினர்

49. What is the percentage of candidates of each reservation group found in reserve list?
காப்புப் பட்டியலில் இடம் பெறும் ஒவ்வொரு இடஒதுக்கீடு தொகுதிக்கான விண்ணப்பதாரர்களின் சதவீதம் என்ன?

(A) 20
(B) 15
(C) 10
(D) 25

50. Indicate the number of chances given to BC candidates for exemption from paying application fees for recruitment
பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த விண்ணப்பதாரர்களுக்கு, நியமனங்களுக்கான கட்டணம் செலுத்துவதிலிருந்து எத்தனை முறை விலக்களிக்கப்படுகிறது என்பதைக் குறிப்பிடவும்.

(A) One
ஒன்று

(B) Three
மூன்று

(C) Two
இரண்டு

(D) Four
நான்கு

51. A member of service whenever selected by direct recruitment to any other State / Central / Universities / Quasi Government can hold service right with former service for a period of ____________ year.
பணியிலுள்ள உறுப்பினர் ஒருவர், அரசுப் பணியிலோ அல்லது பிற மாநில அரசிலோ அல்லது மைய அரசிலோ/பல்கலைக்கழகங்களிலோ அல்லது அரசு போன்ற பிற அமைப்புகளிலோ நேரடி பணிநியமனத்திற்கு தேர்ந்தெடுக்கும் போது, முந்தைய பணியில் அவரது பணியுரிமை காலம் ———— ஆகும்

(A) One
ஓராண்டு

(B) Two
இரண்டாண்டுகள்

(C) Three
மூன்றாண்டுகள்

(D) Four
நான்காண்டுகள்

52. Extension of probation shall be done under Section ________ and ________ of Tamil Nadu Government Servants (Conditions of Service) Act, 2016.
தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016-ல், பிரிவு ________ மற்றும் ________ ன்படி, தகுதிகாண் பருவத்தை நீட்டிப்பு செய்யலாம்

(A) 29 & 30
(B) 32 & 34
(C) 31 & 33
(D) 34 & 35

53. A person shall be recruited direct only against vacancy in ________ cadre.
நேரடி நியமனம் மூலம் தேர்ந்தெடுக்கப்படும் நபர் ஒருவர் ________ பணிநிலையிலுள்ள காலியிடத்திற்கு எதிராக மட்டுமே நியமிக்கப்படுவார்

(A) Provisional
தற்காலிக
(B) Permanent
நிரந்தர
(C) Temporary
நிலையற்ற
(D) Non-permanent
நிரந்தமில்லாத

54. Probation of the Government is declared under Section ________ of Tamil Nadu Government Servants (Conditions of Service) Act, 2016.
தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016-ல், பிரிவு ________ ன் படி, ஒரு அரசு ஊழியர் தகுதிகாண் பருவத்தினை நிறைவு செய்ததாக அறிவிக்கப்படும்

(A) 31
(B) 32
(C) 33
(D) 34

55. The Tamil Nadu Government Servants (Conditions of Service) Act, 2016 is applicable to
தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016 யாருக்குப் பொருந்தும்?

(A) All State and Subordinate Service Posts
அனைத்து மாநில மற்றும் சார்நிலைப் பணிக்கான பதவிகள்
(B) State Service only
மாநிலப் பணி மட்டும்
(C) Sub-ordinate Service only
சார்நிலைப் பணிகளுக்கு மட்டும்
(D) Contract Appointment
ஒப்பந்த நியமனம்

56. Persons holding posts under the Government are classified into how many groups?
அரசுப் பதவி வகிக்கும் நபர்கள் எத்தனை தொகுதிகளில் வகைப்படுத்தப்படுவர்?

(A) One
ஒன்று

(B) Three
மூன்று

(C) Two
இரண்டு

(D) Four
நான்கு

57. Tamil Nadu Public Servants (Conditions of Service) Act, 2016. What is the maximum period upto which the Probation period of a Government servant shall be extended, so as to enable him to acquire the test qualifications?
தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016-ன்படி அரசு ஊழியர் ஒருவர், தேர்வுத் தகுதியைப் பெறுவதற்காக அவரது தகுதிகாண் பருவத்தை எவ்வளவு காலத்திற்கு நீட்டிக்க இயலும்?

(A) Three years
மூன்றாண்டுகள்

(B) Five years
ஐந்தாண்டுகள்

(C) Two years
இரண்டாண்டுகள்

(D) Four years
நான்காண்டுகள்

58. What is the composition of Tamil Nadu Public Service Commission, as per Tamil Nadu Public Service Commission Regulations, 1954?
தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்கு முறைகள் 1954-ன் படி, தேர்வாணையத்தின் கூட்டமைவு யாது?

(A) Chairman
தலைவர்

(B) Members
உறுப்பினர்கள்

(C) Chairman and 14 Members
தலைவர் மற்றும் 14 உறுப்பினர்கள்

(D) Chairperson
தலைவி

59. A member of service, who has been placed on Probation as prescribed in Special Rules applicable to him and not completed his probation is called
ஒரு பணியிலுள்ள உறுப்பினருக்கு பொருந்ததக்க சிறப்பு விதிகளில் வரையறுக்கப்பட்டவாறு தகுதிகாண் பருவத்தில் வைக்கப்பட்டு, தகுதிகாண் பருவத்தை நிறைவு செய்யாதவரை ———— என அழைப்பர்

(A) Probationer in a service
தகுதிகாண் பருவத்தினர்

(B) Approved Probationer
ஒப்புதலளிக்கப்பட்ட தகுதிகாண் பருவத்தினர்

(C) Member of a Service
பணி ஒன்றின் உறுப்பினர்

(D) Full member
முழுநேர உறுப்பினர்

60. Appointment of a member of any service to a higher category of the same service or class is called
பணியின் நிலை உறுப்பினரை, அப்பணியில் அல்லது பணிப்பிரிவின் உயர்வகை அல்லது நிலை ஒன்றிற்கு பணியமர்த்தம் செய்தல் ———— என அழைக்கப்படும்

(A) Recruitment by transfer
மாற்றல் மூலம் பதவியமர்த்தம்

(B) By transfer
பணிமாற்றம்

(C) Promotion
பதவி உயர்வு

(D) Direct recruitment
நேரடி நியமனம்

61. Period of leave, if any, taken, during the period of probation shall be ________ while calculating the period of probation.
தகுதிகாண் பருவத்தை கணக்கீடு செய்வதற்கு, தகுதிகாண் பருவ காலத்தில் விடுப்பு ஏதேனும் எடுத்தால் அதனை

(A) Included
கணக்கில் எடுத்துக் கொள்ளலாம்

(B) Excluded
கணக்கில் எடுக்கவியலாது

(C) Added
சேர்க்கலாம்

(D) Taken into account
கருத்தில் கொள்ளலாம்

62. The expenses of the Tamil Nadu Public Service Commission including salary, allowances and pension payable to the Chairman, Members and Staff are charged on the
தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் செலவுகள், அதன் தலைவர், உறுப்பினர்கள் மற்றும் பணியாளர்களுக்கான சம்பளம், படிகள் மற்றும் ஓய்வூதியம் இவற்றை உள்ளடக்கியதும் ———— யிலிருந்து ஏற்கப்படும் செலவினமாகும்

(A) Contingency Fund
சில்லரைச் செலவினம்

(B) Public Account
பொதுக்கணக்கு

(C) Consolidated fund of the State
மாநிலத்தின் ஒருங்கிணைந்த நிதி

(D) All the above
இவையனைத்தும்

63. The competent authority for the appointment of Chairman in Tamil Nadu Public Service Commission is
தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தலைவரை நியமனம் செய்யும் அதிகாரம் உள்ளவர்

(A) Chief Minister
முதலமைச்சர்

(B) Governor
ஆளுநர்

(C) Council of Ministers
அமைச்சரவைக் குழு

(D) Whip
கொறடா

64. The Minimum General Educational Qualification prescribed in Tamil Nadu Government Servants (Conditions of Service) Act, 2016 is
தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016-ல் வரையறுக்கப்பட்டுள்ள குறைந்தபட்ச பொது கல்வித் தகுதி ———— ஆகும்

(A) Higher Secondary
மேல்நிலைக் கல்வி

(B) Degree
பட்டப்படிப்பு

(C) Master Degree
பட்டமேற்படிப்பு

(D) SSLC
இடைநிலைக் கல்வி

65. The Linguistic qualification for appointment to any post in Tamil Nadu Government Service, by direct recruitment is
நமது மாநிலத்தில், நேரடி ஆளெடுப்பின் மூலமாக எந்தப் பணியிலும் பணியமர்த்தம் செய்யப்படுவதற்குத் தேவையான மொழி சார்ந்த தகுதி ———— ஆகும்

(A) Tamil
தமிழ்

(B) English
ஆங்கிலம்

(C) Hindi
இந்தி

(D) Sanskrit
சமஸ்கிருதம்

66. The Special qualifications in a post are prescribed in
ஒரு பதவிக்கான சிறப்புத் தகுதிகள் ———— ல் வரையறுக்கப்பட்டிருக்கும்

(A) General Rule
பொது விதி

(B) Tamil Nadu Government Office Manual
தமிழ்நாடு அரசு அலுவலக கையேடு

(C) Special Rules
சிறப்பு விதிகள்

(D) Service Act
பணிச்சட்டம்

67. The Probationers, Approved Probationers and full members shall be discharged from service, for want of vacancy in the order of
தகுதிகாண் பருவத்தினர், ஒப்புதலளிக்கப்பட்ட தகுதிகாண் பருவத்தினர் மற்றும் முழுநேர உறுப்பினர்கள் ———— வரிசையில் தேவைப்படும் காலியிடங்களுக்காக விடுவிக்கப்படுதல் வேண்டும்

(A) Seniority
முதுநிலை

(B) Juniority
இளநிலை

(C) Priority
முன்னுரிமை

(D) Superiority
உயர்வு

68. Which one of the following is not the main functions of Tamil Nadu Public Service Commission?
கீழ்கண்டவற்றுள் எது தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் முக்கிய செயல்பாடு அல்ல?

(A) Conducting competitive examinations
போட்டித் தேர்வுகள் நடத்துதல்

(B) Making direct recruitment to any civil posts
அரசுப் பணியாளர்களுக்கான நேரடி நியமனம்

(C) Oral interview
வாய்மொழித் தேர்வு

(D) Selection of members
தேர்வாணைய உறுப்பினர்களை தேர்வு செய்தல்

69. A person who does not possess adequate knowledge of Tamil at the time of appointment by direct recruitment, shall pass the Language Test conducted by Tamil Nadu Public Service Commission within a period of ___________ from the date of initial appointment.
அரசுப் பணியில் நேரடி நியமனம் மூலம் பணியமர்த்தம் செய்யப்பட்ட போதுமான தமிழறிவு பெறாத ஒருவர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் மொழித் தேர்வில், பணி நியமனம் செய்யப்பட்டு ——————— மிகாமல் தேர்ச்சி பெறவேண்டும்

(A) One Year
ஓராண்டுக்கு

(B) Three years
மூன்றாண்டுகளுக்கு

(C) Five years
ஐந்தாண்டுகளுக்கு

(D) Two years
இரண்டாண்டுகளுக்கு

70. In cases where the Special Rules prescribe a diploma in a particular subject as qualification, then possessing of ___________ in the subject shall be deemed to be a higher qualification.
சிறப்பு விதிகளில், ஒரு குறிப்பிட்ட பாடத்தில் பட்டயம் பெற்றிருப்பது கல்வித் தகுதியாகக் குறிப்பிட்டிருப்பின், அப்பாடத்தில் ——————— பெற்றிருப்பதை உயர் தகுதியாகக் கருத வேண்டும்.

(A) Degree
பட்டம்

(B) Master Degree
முதுகலைப்பட்டம்

(C) SSLC
இடைநிலைக் கல்வி

(D) Higher Secondary
மேல்நிலைக் கல்வி

71. Not withstanding anything contained in the Service Act 2016 or in the Special Rules for various State and Subordinate services, other things being equal, preference shall be given to the ____________ for appointment to any post, by direct recruitment.
தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016 ல் அல்லது பல்வேறு மாநில மற்றும் சார்நிலைப் பணிகளுக்கான விதிகளில் அடங்கியுள்ளது, எது எவ்வாறு இருந்த போதிலும், பிற விஷயங்கள் சரிசமமாக இருக்கும் போது, நேரடி நியமத்தின் மூலமான எந்த பதவியமர்த்தத்திற்கும் ———— க்கு முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டும்.

(A) National Cadet Crops
தேசிய மாணவர் படை

(B) Guides
வழிகாட்டிகள்

(C) Outstanding Scouts
திறமையான சாரணியர்

(D) National Service Scheme
நாட்டு நலப்பணி திட்டம்

72. Temporary appointment to any post shall not be continued for a period of ____________ from the date of temporary appointment.
தற்காலிகப் பணியமர்த்தம் செய்யப்படும் எந்தவொரு பதவியும், தற்காலிகப் பணியமர்த்தத் தேதியிலிருந்து ———— மேற்படும் கால அளவிற்கு தொடர இயலாது.

(A) Three months
மூன்று மாதங்களுக்கு

(B) One year
ஓராண்டுக்கு

(C) One month
ஒரு மாதத்திற்கு

(D) Three years
மூன்றாண்டுகளுக்கு

73. The departmental examinations for Government Servants are conducted by
அரசுப் பணியாளர்களுக்கான துறைத் தேர்வுகள் ———— மூலம் நடத்தப்படுகின்றன

(A) Teachers Recruitment Board
ஆசிரியர் தேர்வு வாரியம்

(B) Tamil Nadu Public Service Commission
தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

(C) Medical Services Recruitment Board
மருத்துவ பணிகள் தேர்வு வாரியம்

(D) Railway Recruitment Board
இரயில்வே தேர்வு வாரியம்

74. The appointment to the posts which are outside the purview of Tamil Nadu Public Service Commission shall be made through
தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் வரம்பிற்குட்படாத பதவிகள் ———— மூலம் நியமனம் செய்யப்படுகின்றன

(A) Employment Exchange
வேலை வாய்ப்பு அலுவலகம்

(B) Railway Recruitment Board
இரயில்வே தேர்வு வாரியம்

(C) Staff Selection Commission
பணியாளர் தேர்வு ஆணையம்

(D) Teachers Recruitment Board
ஆசிரியர் தேர்வு வாரியம்

75. The maximum age prescribed for appointment on compassionate grounds for wife or husband of the Government servant who dies in harness, while in service is
ஒரு அரசு ஊழியரின் மனைவி (அ) கணவர், அவர் பணியிலுள்ளபோது இறந்து விட்டாரென்றால், அந்நிகழ்வில் கருணை அடிப்படையிலான பதவியமாத்தத்திற்கான உச்ச வயது வரம்பு ———— ஆகும்

(A) 53 years
53 ஆண்டு

(B) 35 years
35 ஆண்டு

(C) 32 years
32 ஆண்டு

(D) 50 years
50 ஆண்டு

76. Temporary appointments can be made to a post in a Service as per section ________ of the Tamil Nadu Government Servants (Condition of Service) Act, 2016.
ஒரு பணிப் பிரிவு சார்ந்த பணியிடத்தை, தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016-ல் பிரிவு ———— ன்படி தற்காலிகப் பணியமர்த்தம் செய்து கொள்ளலாம்

(A) 15

(B) 16

(C) 17

(D) 20

77. The notice period for resignation is
பதவி விலகலுக்கான அறிவிப்பு கால அளவு ———— ஆகும்

(A) 30 days
முப்பது நாட்கள்

(B) 3 months
மூன்று மாதங்கள்

(C) 3 years
மூன்றாண்டுகள்

(D) One year
ஓராண்டு

78. The content of Schedule – IV of the Tamil Nadu Government Servants (Conditions of Service) Act, 2016 is
தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016-ல் இணைப்புப்பட்டியல்-IV-ன் உள்ளடக்கம் ———— ஆகும்

(A) Minimum General Educational Qualification
குறைந்தபட்ச பொது கல்வித் தகுதி

(B) Reservation of Ex-Servicemen in Group – C posts
தொகுதி-C பதவிகளில் முன்னாள் இராணுவத்தினருக்கான இடஒதுக்கீடு

(C) Reservation of Women
பெண்களுக்கான இடஒதுக்கீடு

(D) Second Class Language test
இரண்டாம் வகுப்பு மொழித் தேர்வு

79. The prescribed period for alternation of date of birth is ________ from the date of entry into service.
அலுவலகப் பதிவு ஆவணங்களில், பதிவு செய்யப்பட்ட பிறந்த தேதியை மாற்றுவதற்கான விண்ணப்பத்தை அளிக்க கால அளவு பணியில் சேர்ந்து ———— என வரையறுக்கப்பட்டுள்ளது

(A) 3 years
மூன்றாண்டுகளுக்குள்

(B) 5 years
ஐந்தாண்டுகளுக்குள்

(C) 2 years
இரண்டாண்டுகளுக்குள்

(D) One year
ஓராண்டுக்குள்

80. The Special Rule is overriding the
சிறப்பு விதி ———— ஐ மீதூர்ந்து இயங்கும் செயல்திறம் உடையது

(A) Adhoc rule
தற்காலிக விதி

(B) Tamil Nadu Government Servants (Conditions of Service) Act, 2016
தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016

(C) Business Rule
அலுவல் விதி

(D) Tamil Nadu Government Office Manual
தமிழ்நாடு அரசு அலுவலக கையேடு

81. The State service posts specified in __________ to Tamil Nadu Public Service Commission Regulations, 1954 shall be consulted for promotion / recruitment by transfer.
தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்கு முறைகள் 1954-ன் ———— ல் குறிப்பிடப்பட்டுள்ள மாநிலப் பணியிலுள்ள பதவிகளை பதவியுயர்வு/மாற்றல் மூலம் பதவியமர்த்தம் மேற்கொள்ள தேர்வாணையத்தைக் கலந்தாலோசிக்க வேண்டும்

(A) Annexure – II
பிற்சேர்க்கை- II

(B) Annexure – 1B
பிற்சேர்க்கை- 1B

(C) Annexure – IV
பிற்சேர்க்கை- IV

(D) Annexure – III
பிற்சேர்க்கை- III

82. A Government servant may __________ the notice of resignation, before its acceptance by the appointing authority.
அரசுப் பணியாளர், பதவி விலகல் அறிவிப்பினை நியமன அதிகாரியல் ஏற்கப்படும் முன்பு

(A) Defy
எதிர்த்து நிற்கலாம்

(B) Enter
பதிவு செய்யலாம்

(C) Withdraw
திரும்பப் பெறலாம்

(D) Contend
வாதிடலாம்

83. Every appeal or review shall be preferred within __________ months from the date of receipt of order of dismissal.
மேல்முறையீடு அல்லது மறு ஆய்வு மனு ஒன்று, ஆணை பெறப்பட்ட தேதியிலிருந்து ———— மாதங்களுக்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்

(A) Four
நான்கு

(B) Three
மூன்று

(C) Two
இரண்டு

(D) Five
ஐந்து

84. The re-employment of a retired person shall not be regarded as a ____________ to that service.
ஓய்வூதியதாரர் ஒருவரை மீண்டும் பணியமர்த்துவதானது, அந்தப்பணியில் ____________ கருதப்படலாகாது

(A) Member
உறுப்பினராக

(B) First appointment
முதல் பணியமர்த்தமாக

(C) Full member
முழுநேர உறுப்பினராக

(D) Approved probationer
ஒப்புதலளிக்கப்பட்ட தகுதிகாண் பருவத்தினர்

85. The Chairperson of Committee on appeal is
மேல்முறையீட்டுக்கான குழுவின் தலைவர் ____________ ஆவார்

(A) Secretary, Finance Department
நிதித்துறை செயலாளர்

(B) Secretary, Personnel and Administrative Reforms Department (now Human Resources Management)
செயலாளர் பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை (தற்போது மனித வள மேலாண்மைத் துறை)

(C) Vigilance Commissioner and Commissioner for Administrative Reforms
விழிப்புப்பணி ஆணையர் மற்றும் நிர்வாக சீர்திருத்த ஆணையர்

(D) Secretary, Tamil Nadu Public Service Commission
செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

86. It shall not be necessary for the Tamil Nadu Public Service Commission to be consulted before issue of the following punishment orders in disciplinary cases.
ஒழுங்கு நடவடிக்கை நேர்வுகளில், இறுதியாணை வெளியிடுமுன் கீழ்காணும் எந்த உத்தேச தண்டனை வழங்குவதற்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தை கலந்தாலோசிக்க வேண்டிய அவசியமில்லை?

(A) Dismissal
பணியறவு

(B) Compulsory retirement
கட்டாய ஓய்வு

(C) Removal
பணிநீக்கம்

(D) Withholding of increments / promotion
ஊதிய உயர்வு நிறுத்தம்/பதவியுயர்வு நிறுத்தம்

87. The General rule of Tamil Nadu State and Sub-ordinate Service has been replaced by
தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணிக்கு பதிலாக நிறுவப்பட்டது ———— ஆகும்

(A) Tamil Nadu Lok Ayuktha Act
தமிழ்நாடு லோக் ஆயுக்தா சட்டம்

(B) Tamil Nadu Government Servants (Conditions of Service) Act, 2016
தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016

(C) Tamil Nadu Prohibition Act 2017
தமிழ்நாடு மதுவிலக்கு சட்டம் 2017

(D) Tamil Nadu Universities Laws Act, 2017
தமிழ்நாடு பல்கலைக்கழகங்களின் சட்ட விதி 2017

88. "On duty" means, a person as a member of a service is
"பணியில் இருத்தல்" (On duty) என்பது ஒருவர் ஒரு பணியின் ஓர் உறுப்பினராக பின்வரும் ———— முறைகளிலும் இருப்பவர் ஆவார்

(A) Undergoing probation
தகுதிகாண் பருவத்தினர்

(B) On joining time
பணியேற்பிடை காலத்தில் உள்ளவர்

(C) On compulsory wait
கட்டாய காத்திருப்பு காலத்தில் உள்ளவர்

(D) All the above
இவை அனைத்தும்

89. No ________ list shall be prepared in respect of the posts for which the consultation of the Commission is not required.
தேர்வாணையத்தை கலந்தாலோசிக்கத் தேவையில்லாத பதவிகளுக்கு ———— பெயர்ப் பட்டியல் தயாரிக்கக் கூடாது

(A) Regular
முறையான

(B) Temporary
தற்காலிக

(C) Adhoc
தனி

(D) Special
சிறப்பு

90. The list of approved candidates shall be valid for a period of
ஒப்புதலளிக்கப்பட்ட விண்ணப்பதாரரின் பெயர்ப் பட்டியலுக்கான செல்லுந்தன்மையின் கால அளவு ———— ஆகும்

(A) One month
ஒரு மாதம்

(B) Two months
இரண்டு மாதங்கள்

(C) One year
ஓராண்டு

(D) Two years
இரண்டாண்டுகள்

91. In special circumstances, the appointing authority may extend the time limit for joining duty to an approved candidate selected by the commission, upto ________ for valid reasons.
தேர்வாணையத்தால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஏற்பளிக்கப்பட்ட விண்ணப்பதாரர் ஒருவர், பணியில் சேர அனுமதிக்கப்படும் காலவரம்பினை, சிறப்பு சூழ்நிலைகளில் உரிய நியமன அதிகாரி தகுந்த காரணங்களுடன் வரை நீட்டிக்கலாம்

(A) Three months
மூன்று மாதங்கள்

(B) Six months
ஆறு மாதங்கள்

(C) Nine months
ஒன்பது மாதங்கள்

(D) One year
ஓராண்டு

92. Any temporary post, which is in existence for more than ________ shall be treated as a permanent one for the purpose for fixation of estimate of vacancy.
———— மேல் இருந்து வரும் தற்காலிகப் பதிவு எதுவும், காலிப் பணியிட மதிப்பீடு நிர்ணயம் செய்யும் போது நிரந்தரப் பதவியாகக் கருதப்பட வேண்டும்

(A) One year
ஓராண்டுக்கு

(B) Two years
இரண்டாண்டுகளுக்கு

(C) Three years
மூன்றாண்டுகளுக்கு

(D) Five years
ஐந்தாண்டுகளுக்கு

93. The maximum age limit for compassionate grounds appointment who retired from service on Medical invalidation before attaining the age of
கருணை அடிப்படையிலான நியமனம் மேற்கொள்ள அரசுப் பணியாளர் ———— நிறைவெய்துவதற்கு முன்பு மருத்துவத் தகுதியின்மையின் பேரில் பணியிலிருந்து ஓய்வு பெற்றிருக்க வேண்டும்

(A) 35 years
35 வயது

(B) 50 years
50 வயது

(C) 53 years
53 வயது

(D) 58 years
58 வயது

94. The appointment on agreement or contract is referred under Section ___________ of the Tamil Nadu Government Servants (Conditions of Service) Act, 2016.
தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016-ல், பிரிவு ———— ன்படி உடன்படிக்கை வாயிலாக அல்லது ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தம் செய்யலாம் என குறிப்பிடப்பட்டுள்ளது

(A) 18
(B) 19
(C) 20
(D) 27

95. Who is competent to issue a 'destitute widow' certificate?
"ஆதரவற்ற விதவை சான்றிதழ்" வழங்க தகுதியுள்ள அதிகாரி

(A) District Revenue Officer
மாவட்ட வருவாய் அலுவலர்
(B) District Collector
மாவட்ட ஆட்சித் தலைவர்
(C) Revenue Divisional Officer
வருவாய் கோட்டாசியர்
(D) Tahsildar
வட்டாட்சியர்

96. The rule of reservation shall not apply to the appointments on
இடஒதுக்கீடு விதி ———— செய்யப்படும் நியமனங்களுக்குப் பொருந்தாது

(A) Direct recruitment
நேரடி நியமன முறையில்
(B) Compassionate grounds
கருணை அடிப்படையில்
(C) Recruitment by transfer
மாற்றல் மூலம் பதவியமர்த்தம்
(D) By transfer
பணிமாற்றம் மூலம்

97. The Tamil Nadu Civil Services (Discipline and Appeal) Rules shall come into force on
தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்குமுறை மற்றும் மேல்முறையீடு) விதி நடைமுறைக்கு வந்த ஆண்டு

(A) 01.01.1955
(B) 01.02.1955
(C) 26.01.1950
(D) 25.05.1955

98. The punishment of compulsory retirement, removal / dismissal from service shall be imposed on a Government servant for violation of __________ of Tamil Nadu Government Servants Conduct Rule, 1973.
தமிழ்நாடு அரசுப் பணியாளர் நடத்தை விதிகள், 1973-ல் விதி —————— ஐ மீறும் அரசுப் பணியாளர்களுக்கு, கட்டாய ஓய்வு, பணிநீக்கம் மற்றும் பணியறவு போன்ற தண்டனைகள் வழங்கப்படலாம்

(A) Rule 19
விதி 19

(B) Rule 10
விதி 10

(C) Rule 7
விதி 7

(D) Rule 5
விதி 5

99. The __________ of a person from the Civil Service of the State Government shall not disqualify from future employment.
மாநில அரசுப் பணியிலிருந்து —————— செய்யப்பட்ட ஒருவரை, எதிர்கால வேலை வாய்ப்பிற்கு தகுதியற்றவரெனக் கருதலாகாது

(A) Dismissal
பணியறவு

(B) Removal
பணிநீக்கம்

(C) Compulsory retirement
கட்டாய ஓய்வு

(D) Suspension
தற்காலிக பணிநீக்கம்

100. When more than one Government Servants are involved in a disciplinary case, the disciplinary proceedings shall be instituted under rule __________ of the Tamil Nadu Civil Services (Discipline and Appeal) Rule?
ஒழுங்கு நடவடிக்கையில் ஒன்றுக்கு மேற்பட்ட அரசுப் பணியாளர்களுக்கு தொடர்பிருந்தால், அவ்வொழுங்கு நடவடிக்கை தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்குமுறை மற்றும் மேல்முறையீடு) விதிகளில், விதி —————— ன் கீழ்தொடரப்பட வேண்டும்

(A) 9

(B) 9(b)

(C) 9A

(D) 9(2)